RARY
MAY 2017
SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

மூன்றாம் வருட/ இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2014/2015

(நவம்பர் / டிசம்பர் 2016)

## TLS 3243 தேர்ந்தெடுக்கப்பட்ட பாட நூல்கள் - II
## Prescribed Texts - II

**நேரம்: 03 மணித்தியாலங்கள்**

**பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

---

(1) "பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் அகத்திணைக் கொள்கையானது காதலை அடிப்படையாகவன்றி, சமுதாய இயங்குநிலையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பாகுபாடாகும்." இக் கூற்றினை க. கைலாசபதியின் 'காதலும் கட்டுப்பாடும்' என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (25 புள்ளிகள்)

(2) "பாவலர் துரையப்பாபிள்ளையின் கவிதைகளில் அக்கால யாழ்ப்பாண சமூகத்தினைப் பற்றிய விமர்சனம் காணப்படுகின்றது" இக் கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க. (25 புள்ளிகள்)

(3) சமூக உறவுகள் இலக்கணத்திற் செல்வாக்குச் செலுத்தியுள்ளமைக்கு திணையமைப்பு ஆதாரமாக உள்ளமையை கா. சிவத்தம்பியின் 'இலக்கணமும் சமூக உறவுகளும்' என்னும் நூலை ஆதாரமாகக் கொண்டு மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

(4) அ) 'மூன்றாம் உலகம்' என்ற தொடர் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது? சுருக்கமாகக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

ஆ) 'மண்ணும் சொல்லும் கவிதைகள்' என்னும் கவிதைத்தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு மூன்றாம் உலகக் கவிதைகளின் பண்புகளை விளக்குக. (20 புள்ளிகள்)

(5) மயிலை. சீனி. வேங்கடசாமியின் 'பௌத்தமும் தமிழும்' என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்கள் பற்றி விளக்குக.

அ) பௌத்த மதத் தத்துவம்

ஆ) பௌத்தம் தமிழ்நாட்டில் வளர்ச்சி பெற்ற வரலாறு

(12 ½ x 2 = 25 புள்ளிகள்)

(6) ஈழத்து நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கு மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகியோர் ஆற்றிய பங்களிப்பினை 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' என்னும் கவிதைத் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக. (25 புள்ளிகள்)

****************************************